**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.58/2023</u>**

தேதி: 08.08.2025

பெயர் : ராமையா (வா.சா.1) த/பெ: பெரியண்ணன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

1. என்னுடைய சொந்த ஊர் வெங்கடாசலபுரம். தாவாவை 5 அயிட்டம் சொத்து குறித்து தாக்கல் செய்துள்ளேன். அதில் 3 வது அயிட்ட சொத்தான சர்வே எண்.155/3 ல் 47 செண்ட் நிலத்தில் 14 செண்ட் நிலத்திற்கு தான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அந்த நிலத்தை தாயன் மற்றும் அவரது மனைவி செல்லம்மாள் ஆகியோரிடம் கிரையம் பெற்றுள்ளேன். தாயன் அந்த நிலத்தை கிரையம் வாங்கவில்லை, அவரது அப்பா இறந்தபிறகு வாரிசு அடிப்படையில் அந்த நிலம் அவருக்கு சொத்தாக கிடைத்தது என்றால் சரிதான். தாயன் அப்பா ஆனைக்குட்டி என்பவரை எனக்கு தெரியும். அவருடைய மனைவி பெயர் காமாட்சி. அவர்களுக்கு 3 மகன்கள். தாயன், சுருட்டை என்ற பெருமாள், வடகிரி ஆவார்கள். மொத்தம் 47 செண்ட் நிலத்தில் 33 செண்ட் நிலத்தை எங்கள் ஊரை சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள 14 செண்ட் நிலம் ஆனைக்குட்டி என்பவரின் அனைத்து வாரிசுகளுக்கும் பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். தாயன் என்பவரிடம் இருந்து மட்டும் நான் கிரையம் வாங்கியுள்ளேன், மற்ற பாகஸ்தர்களிடம் நான் கிரையம் வாங்காததால் எனக்கு 14 செண்ட் நிலம் முழுவதுமாக பாத்தியப்பட்டதல்ல என்றால் எனக்கு 14 செண்ட் நிலம் முழுவதும் பாத்தியப்பட்டது. நான் கிரையம் வாங்கிய 14 செண்ட் நிலத்தில் தாயன் என்பவருக்கு 3 ல் 1 பங்கு தான் பாத்தியம் என்றால் சரியல்ல. 14 செண்ட்டில் 3 ல் 2 பாகம் தாயனுடன் பிறந்தவர்களான வடகிரி மற்றும் சுருட்டை என்ற பெருமாள் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. வடகிரி மற்றும் சுருட்டை என்ற பெருமாள் அவர்களுக்கு உள்ள பாகத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

2. 2ம் பிரதிவாதி காத்தான் என்பவருடைய மனைவி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி காத்தான் என்பவரின் மகன், 4ம் பிரதிவாதி ஆனைக்குட்டி என்பவரின் பேரன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியின் மனைவி, 1ம் பிரதிவாதியின் மகள். 2 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியமற்ற நபர்கள் என்றால் சரியல்ல. எனக்கும் காத்தானுக்கும் பாதையில் வண்டி செல்வது சம்மந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். காத்தான் நிலத்திற்கு மேற்கில் என்னுடைய நிலம் உள்ளது. என்னுடைய நிலத்திற்கு செல்ல காத்தான் நிலம் வழியாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். வாரி வழியாகவும் செல்லலாம். மாவட்ட ஆட்சியரிடம் நான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் 3வது அயிட்ட சொத்து பொறுத்து பாக பிரிவினை வழக்கு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடியாக வேண்டியது என்றால் சரியல்ல. பாதை பிரச்சினை வைத்து கொண்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்